


# நினைவு மலர்

அமரர்

## திருமதி. இராசம்மா சுப்பிரமணியம்

05-05-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பையும் பாசத்தையும் அள்ளித் தந்து
எம்மை வழி காட்டிய குலதெய்வம் நீங்கள்
வறியோர்க்கும் அயலோர்க்கும் கரம் நீட்டி
வாழ்வு கொடுத்த ஒளி விளக்கு நீங்கள்
உங்கள் பிள்ளைகளை உயிரென எண்ணி
உள்ளம் உருகிய அன்புத் தாய் நீங்கள்
ஊர் மக்கள் நெஞ்சில் உயர்ந்த இடம் பிடித்து
நிமிர்ந்து நிற்கும் இமயமலை நீங்கள்
இந்நினைவு மலரினை உங்கள்
பொற்பாதங்களில் வைத்து
தலை வணங்கி சமர்ப்பிக்கின்றோம்
இன்று நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

அமரர்

# திருமதி. இராசம்மா சுப்பிரமணியம்

அவர்கள்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 03 |  | 05 |
| 03 | | 04 |
| 1930 | | 2015 |

## திதி வெண்பா

சீர் பொலி ஜெய வருடம் பங்குனித்திங்கள்
அபர பட்ஷ பிரதமை திதி தன்னில்
சீலமிகு பெண்ணரசி இராசம்மா தானும்
சித்திர வேலாயுதக்குமரன் தாள் சேர்ந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## அமரர் திரு. வே. சுப்பிரமணியம் அவர்கள்

பிறப்பு
10.01.1924

இறப்பு
23.11.2008

## அமரர் திருமதி. இராசம்மா சுப்பிரமணியம் அவர்கள்

பிறப்பு
03.03.1930

இறப்பு
05.04.2015

முத்துக்கள் பெற்றெடுத்து முத்தமிழ் ஊட்டியவள்
மூவுலகையும் நேசிக்கும் உத்தமனார் கரம் பிடித்தவள்
வாழ்வு எதுவென வழிமுறை காட்டிச் சென்றவளே.......
வாழ்ந்து காட்டுகிறோம் அமைதி கொள்எம் பெருந்தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 01

எழுத்துக்கள் யாவும் "அ" என்ற அகர ஒலியை முதலாகக் கொண்டுள்ளன; அது போல் ஆதியாகிய கடவுள் உலக உயிர்க்கெல்லாம் முதலாவான்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 02

கடவுள் எனும் தூய அறிஞனது திருவடியை வணங்காதவர்களுக்கு கற்ற கல்வியினால் பயன் ஏதுமில்லை.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் 03
நிலமிசை நீடுவாழ் வார்.

உயிர்களின் உள்ளத்தாமரை மலரில் வீற்றிருக்கும் கடவுளின் திருவடியை நினைத்திருப்பவர் இவ்வுலகில் நீண்ட காயம் வாழ்வர்.

வேண்டுதல்வேண் டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல். 04

விருப்பு வெறுப்பற்ற கடவுளை தொழுபவர்க்கு என்றும் துன்பம் நேராது.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 05

இறைவனின் மெய்ப்புகழை உணர்ந்தவர்க்கு அறியாமையால் வரும் நல்வினை தீவினை வந்து சேராது.

பொறிவாயில் ஐந்தவித்வான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 06

ஐம்புலன்களையும் அடக்கி, இறைவனின் நல்லொழுக்க நெறியில் வாழ்பவர் நீண்ட காலம் வாழ்வர்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது 07

ஒப்பற்ற உயர்வுடைய திருவடியை நினைப்பவரன்றி மற்றவர்களால் மனக் கவலையை போக்க இயலாது.

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீத்தல் அரிது 08

அறக்கடலாகிய இறைவன் திருவடியை அடைந்தவரன்றி மற்றவர்களால் இன்பம், பொருள் என்னும் இருகடலை கடக்க முடியாது.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத தலை 09

எண்ணுறுங் குணங்களையுடைய திருவடிகளை வணங்காத்தலை; பாராத கண், கேளாத செவி போன்றதாகும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். 10

இறைவன் திருவடியைப் பற்றியவர் பிறவிக் கடலை கடப்பார், பற்றாதவர் அதிலேயே அழிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்டமில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.

## திருவாசகம்

உற்றாரையான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாலின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவேனே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம் பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின் முத்தியே சேர்வதற்
- கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா ஒப்பிலாமாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா வெற்றிவேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி இராசம்மா சுப்பிரமணியம்
# அவர்களின்
# வாழ்வின் பதிவுகள்

இலங்கையின் வடபகுதியில் உள்ள தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுவில் என்றொரு கிராமம். பச்சையாய்ப் படர்ந்திருக்கும் வயல்களும் தோட்டங்களும் சூழ அமைந்திருக்கும் கிராமம். வயல் தோட்டம் என்று உழைத்து வாழும் மக்கள் ஒருபுறம் கல்வியில் உயர்ந்து அரச உத்தியோகம் பார்க்கும் கல்விமான்கள் ஒரு புறம் என பல விதங்களிலும் முன்னேற்றம் கண்டு வரும் கிராமமாக மட்டுவில் இருந்தது. இக்கிராமத்தின் அடையாளமாக பிரசித்தி பெற்ற பன்றித்தலைச்சி அம்மன் கோவில் விளங்கியது. அருள் பாலிக்கும் அம்மனின் பக்தர்களாகவே அக்கிராமத்து மக்கள் வாழ்ந்து வந்தனர்.

இவர்களிடையே வாழந்து வந்த செல்லப்பா சின்னம்மா தம்பதிகளுக்கு இரண்டாவது குழந்தையாக இராசம்மா 1930ம் ஆண்டு பிறந்தார். ஐந்து பிள்ளைகள் கொண்ட குடும்பம் அது. மூத்தவராக கந்தசாமியும் இளையவர்களாக சண்முகசுந்தரம், கணேசன், சகுந்தலாவும் இவரின் சகோதரர்களாக அமைந்தார்கள். இராசம்மா சிறு வயதிலிருந்தே வீட்டுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு சகோதரர்களை அன்பும் பாசமுமாக கவனித்து வந்தார்.

இவருக்கு இருபத்தொரு வயதானபோது அருகேயிருக்கும் கிராமமான சரசாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை, சேதுப்பிள்ளை தம்பதியரின் கடைசி மகனான சுப்பிரமணியத்துக்கு மணம் செய்து வைக்க தீர்மானித்தார்கள். 1951ம் ஆண்டு வைகாசி மாதம் செல்வச்சந்நிதி கோவிலில் இவர்களின் திருமணம் இனிதே நடைபெற்றது. திருமணத்தின் பின் இருவரும் கிளிநொச்சி பிரதேசத்தில் உள்ள குமரபுரம் கிராமத்தில் வாழத் தொடங்கினார்கள். இவர் தனது பெற்றோரையும் சகோதரர்களையும் மிகவும் நேசித்ததால் அவர்களையும் படிப்படியாய் தங்களுடன் அழைத்துக் கொண்டார்.

அக்காலத்தில் சிறு காடு பற்றை என்ற இருந்த பிரதேசத்தில் பல சிரமங்களுக்கு மத்தியிலேயே வாழவேண்டியிருந்தது. அந்த சிரமங்களையெல்லாம் தன் பொறுமையான குணத்தினால் சமாளித்து மகிழ்வோடு வாழ்ந்தார்.

ரதிதேவி, சுசீலாதேவி, விமலாதேவி, பேரின்பநாதன், இந்திராதேவி, சாரதாதேவி, சிவகுமாரன், சிவாஜினி, சுகிர்தினி, கௌரி, சுரேஷ்குமார் ஆகிய பதினொரு பிள்ளைச்செல்வங்களுக்கு தாயானார். அவர்களை அன்போடும் பாசத்தோடும் வளர்த்தார். தன் இனிய குணங்களை பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு முறையே கந்தசாமி, பத்மநாபன், பரமநாதன், சாந்தினி, பரராஜசிங்கம், பாலேந்திரன், நிரோஷினி, ஜெயக்குமார், கணேசலிங்கம், முருகானந்தன், மிதுனா என்போரை உரியகாலத்தில் திருமணம் செய்து வைத்தனர்.

தமிழரசி, இளவரசி, பிரதீபா, அனுகீத்தா, பிரசன்னா, கவிதா, நிரூபன், விதுரா, பூஜா, பிரார்த்தனா, நிர்த்திகா, ஆரபி, வைகரி, லச்னா, அனுருதன், அபிரா, மயூரா, அனோஜன், அஜிதன், வருணன், சபேஷ், ஆதித்யா, சாகித்யா ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

பேரப்பிள்ளைகளில் தமிழரசி பரதனையும் இளவரசி இரஞ்சிதனையும் பிரதீபா திருக்கரனையும் அனுகீத்தா சஞ்சயனையும் பிரசன்னா சுவர்ணாவையும் கவிதா கோணேஸ்வரனையும் பிரார்த்தனா தினேஷையும் வாழ்க்கைத் துணையாக ஏற்றதையும் மனம் நிறைவோடு பார்த்து நின்றார்.

அரங்கன், மகிமா, துளசி, யாதவி, ஸ்ரீமன், கணன், அஸ்வின், சஞ்சனா, நிலா, முகில், கிரித்திக் என பூட்டப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார். லண்டன், அவுஸ்திரேலியா என சென்று பூட்டப்பிள்ளைகள் வரை அனைவரையும் பார்த்து வந்த ஆனந்தமும் இவருக்கு கிடைத்தது. இவரின் இறுதி நாட்களில் தன் பதினொரு பிள்ளைகளையும் ஒரு சேரப் பார்த்து அவர்களுடன் தனது எண்பத்தி ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடி மகிழ்ந்த சந்தர்ப்பமும் இவருக்குக் கிடைத்திருந்தது.

அனைவரையும் நேசிக்கும் இயல்புடைய இவர் அமரர் வல்லிபுரம் அமரர் கந்தையா, அமரர் செல்லையா, அமரர் தங்கம்மா, அமரர் செல்லாச்சி, அமரர் மாணிக்கம், அமரர் முத்துப்பிள்ளை, அமரர் பூபதி, நேசரத்தினம், சிவயோகராணி, கனகரத்தினம் ஆகியோரின் பாசம் மிக்க மைத்துனியாகவும் வாழ்ந்திருந்தார்.

எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கும் முகம், அன்பும் பாசமும் நிறைந்த மனது, ஆதரவற்றோரை அரவணைக்கும் கருணை, அடுத்தவரை நோக வைக்காத இனிய வார்த்தைகள்.... அதிர்ந்து பேசத் தெரியாத மென்மை...... இவைகள் எல்லாம் இவருக்கான அடையாளங்கள்.

எல்லோராலும் நேசிக்கப்படும் ஒரு பெண்மணியாக வாழ்ந்து 05.04.2015ம் நாளில் இவ்வுலகை விட்டு மறைந்தார். இவரது இறுதி நாளில் ஊரே திரண்டு வந்து கண்கலங்கி நின்றது. ஊராரும் உற்றாரும் உறவினரும் கண்ணீர் வழியப் பார்த்திருக்க இவரது இறுதி ஊர்வலம் ஆரம்பமானது. வானம் கூட நீர் சிந்தி இவரை வழியனுப்பி வைத்தது.

தான் நேசித்த மண்ணை விட்டு தான் அன்பு செலுத்திய மனிதர்களை விட்டு தான் வணங்கிய குமரபுரம் சித்திரவேலாயுதக் குமரனின் திருப்பாதங்களில் சரணடைந்து கொண்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக...... என்றும் இவரது நினைவு நீங்காதிருக்குமாக......

**- ஓம் சாந்தி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா என்னும் அகல்விளக்கு

ஆகாயம் அளவிற்கு அன்பு மனம்
அனைவரையும் அரவணைக்கும் இனிய குணம்
எத்தனையோ நெஞ்சங்களில் - நீங்கள்
அணையாது ஒளி வீசும் அகல்விளக்கு...
பசுமையான நினைவுகளாய் பாசமான உணர்வுகளாய்
நாம் சுவாசிக்கும் காற்றாய் - எம்
கண்ணின் மணிக்குள் கலந்திருக்கும்
எங்கள் அன்பு அம்மா...

சிறுவயது முதல் உங்கள் குடும்பத்தின் சுமைதாங்கியாய்
அண்ணன் தங்கை தம்பிகளைக் கலங்காமல் காத்தீர்கள்
மட்டுவிலில் வாழ்ந்த காலம்....
தேடி வந்த துன்பங்களைத் தூர விலக்கி
தன்னம்பிக்கையோடு வாழ்வை எதிர்கொண்டீர்கள்
வாழ்வில் ஒரு விடியலுக்காய்க் காத்திருந்த போது
எங்கள் ஐயாவின் கரம் பிடித்து - அந்தக்
குமரக் கடவுளின் துணையுடன் - குமரபுரத்தில்
உங்கள் வாழ்க்கையை ஆரம்பித்தீர்கள்

மனைவியை இழந்த அண்ணனையும்
தம்பியை இழந்த அவன் குடும்பத்தையும்
ஐயாவும் நீங்களும் அன்போடு அரவணைத்தீர்கள்
அவர்களோடு தங்கை வீட்டுப் பிள்ளைகளையும் உங்கள்
கூட்டுக்குள் சேர்த்து பாதுகாத்து வளர்த்தீர்கள்
உங்கள் கடைசித் தம்பியின் அறிவாற்றலையும்
உயர்வையும் கண்டு ஒரு தாயாய் பெருமை கொண்டீர்கள்

பிள்ளைப் பருவத்திலேயே
பெற்றவர்களை இழந்து தனியாய்த் தவித்த
பரமசாமி அத்தானையும்
தாயை இழந்த நாகராசா அண்ணையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாய் வாரி அணைத்துக் கொண்டீர்கள்
அன்று முதல் அவர்களே
உங்களின் மூத்த பிள்ளைகளாய் ஆனார்கள்
அவர்களுக்கு ஒரு அம்மாவாய்
முன்னின்று திருமணமும் நடத்தி வைத்தீர்கள்
மகேசக்கா... எங்களையே நம்பி
எம் வீட்டிற்கு ஒரு மகளாய் வந்தா
இன்று வரை அவ உங்கள் மீது வைத்த பாசம்
இம்மியளவும் குறையவே இல்லை அம்மா

சகோதரர்கள் என்றால் எப்படி வாழவேண்டும் என்று
இறுதி வரை வாழ்ந்து காட்டியவர்கள்
எங்கள் ஐயா.... ஆசையையா... பெரியையா....
அவர்களுக்கு இம்மியளவும் குறையாத அன்பும் ஒற்றுமையும்
உங்களுக்கும்... ஆசையம்மாவிற்கும்... பெரியம்மாவிற்கும் இருந்தது
உங்கள் வாழ்க்கை முறையை
குழந்தைகள் நாங்கள் பார்த்து வளர்ந்தோம்
அதனால்தானோ எல்லா வீட்டுப் பிள்ளைகளும் இன்றும்
பாசமும் நேசமுமாய் அன்புடன் வாழ்கின்றோம்.

கஷ்டம் என்று வந்தோர்க்கு
வயிறு நிறைய உணவும் மடி நிறைய நெல்லும் தந்து
மனம் நிறைந்து அவர்கள் செல்வதை
அக மகிழ்வோடு பார்த்திருப்பீர்கள்
நாட்டின் பிரச்சனைகளால் அடிக்கடி எங்கள் பள்ளிக்கூடமும்
எங்கள் வீடும் அகதிகளால் நிறைந்து வழியும்
முற்றத்தில் கிடாரங்களில் உலை கொதித்துக் கொண்டே இருக்கும்
நெல்லறையில் விதைப்புக்காக அடுக்கி வைக்கும்
நெல்லு மூட்டைகள் கூட குறையத்தொடங்கும்
அள்ளிப்போடும் உங்கள் கைகளால் எத்தனை பேர்
பசியாறினர் என்னும் கணக்கே உங்களுக்கு தெரிவதில்லை
வருவோரையெல்லாம் சாப்பிட்டு விட்டுப் போகச் சொல்லும் நீங்கள்
இறுதி நாளன்று கூட உங்களைப் பார்க்க வந்தவரிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டுட்டு போங்கோ என்று சொன்னதே
உங்கள் கடைசி வார்த்தை ஆனது அம்மா...

நாம் ஒன்றாய் வாழ்ந்த அந்தக் குமரபுரத்து முச்சார வீடு....
மனசு நிறைந்த சந்தோஷமும்
வீடு நிறைந்த பிள்ளைகளுமாய் எப்போதும் கலகலத்திருக்கும்
உங்கள் பிள்ளைகள் பதினொன்றுதான்... ஆனால்
தம்பி பிள்ளைகள் தங்கை பிள்ளைகள் என்று எல்லோரையும்
சீராட்டி நீங்கள் வளர்த்த அரண்மனை அது

முற்றத்து மேடையில் நிலா வெளிச்சத்தில்
நாங்கள் வட்டமாய் ஓட.... குழைத்துக் குழைத்து
நீங்கள் ஊட்டிய பச்சை அரிசி சோற்றின் வாசனையும்
புதுநெல்லு வெட்டி பத்து வகைக்கறிகளுடன்
ஐயா குழைக்கும் புதிர்ச்சோறும் சர்க்கரையும்
இன்னமும் நாவில் தித்திக்குதே அம்மா

நாங்கள் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படித்த காலங்கள்...
நீங்கள் அடிக்கடி அனுப்பும் சாப்பாட்டுப் பொதிகளில்
எம்மைப் பிரிந்திருக்கும் - உங்கள்
தாயுள்ளத்தின் பாசம் தெரியும்
நாங்கள் சுற்றி இருந்து அதை ஒன்றாய் குழைத்து
சந்தோஷமாய் பகிர்ந்து சாப்பிடுவோம்
வாட்டிய வாழையிலையில் முட்டைப் பொரியலோடு
கட்டி அனுப்பும் அந்த உணவின் வாசமும் சுவையும்
அதில் தெரியும் உங்கள் வாஞ்சையும்
இத்தனை வருடங்களான பின்னும்
இன்னமும் மறக்கவே இல்லை அம்மா

ஐம்பத்தி ஏழு வருடங்கள் ஐயாவுடன்
சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையுமாய்
அரசவாழ்வு அமைந்தது உங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தாமல் சிதறாமல் சமைக்க கற்றுத் தந்தீர்கள்
சிக்கனமாய் செலவழித்து சேமிக்க காட்டித் தந்தீர்கள்
சேருகின்ற காசுகளை சேலைக்கடியில் ஒளித்து வைத்து
பின் மொத்தமாய் எடுத்து நீட்டும் வித்தையைக்
காட்டித் தந்தவளும் நீங்கள் தான் அம்மா
பால் வித்து நெல் வித்து பச்சை அசிரி வித்து
எத்தனை மாயம் செய்து எம் திருமணத்திற்கு
பெரும் பங்கு தந்தவளும் நீங்கள் அல்லவா.....

எமக்கெல்லாம் தாயாக இருந்த நீங்கள்
பின் எமக்கே சேயாகிப் போனீர்கள்
எங்கள் செல்லக் குழந்தையாய்
கொஞ்சிக் கொஞ்சி தடவித்தடவி
உங்களைக் கண்ணுக்குள் வைத்துக் காத்தோம்
தூரத்தே இருந்து நினைக்கையில்
உங்களைத் தாயாய் நினைத்து உள்ளம் பாகாய் உருகும்
பக்கத்தில் வந்து விட்டாலோ நம் மனம்
அன்னையாய் மாறி உங்களை ஒரு குழந்தையாய்
அணைத்துக் கொள்ளும் .

நாங்கள் மட்டுமன்றி எம் குடும்பத்துக்குள் வந்தவர்கள் கூட
உங்களை அன்போடு தாங்கிக்கொண்டது
உங்களுக்கு கிடைத்த பெரும் வரம் அம்மா
பேர் சொல்லும் பேரப்பிள்ளைகள்
கல்வியில் உயர்ந்த போது பெருமையில் பூரித்தீர்கள்
ஆசையோடு கொஞ்சி விளையாட பூட்டப்பிள்ளைகளை
ஆண்டவன் அள்ளிக் கொடுத்தான் நிறைவாக
தேசத்துக்கொருவராய் நாம் வாழ்ந்தாலும்
அவ்விடமும் நீங்கள் வருகை தந்தீர்கள்
ஆனந்தமாய் எம்முடன் இருந்தீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பெற்றவை அனைத்தும் முத்துக்கள்
எம் குடும்பத்திற்கு வந்தவர்களோ வைரங்கள்
பேரப்பிள்ளைகளோ தங்கக் கட்டிகள் உங்கள்
பூட்டப்பிள்ளைகளோ பட்டுக்குட்டிகள்..
குறையொன்றுமில்லாத வாழ்வுதனை உங்களுக்கு
மனம் நிறைந்து தந்தான் அந்த சித்திரவேலாயுதகுமரன்

ஆழ வேரூன்றி அகலக் கிளை பரப்பி ஆலமரமாய்
நிழல் தரும் எங்கள் ஐயாவும் நீங்களும்
காட்டிய அன்பும் கற்றுத் தந்த பாடங்களும்
என்றும் எமக்குள்ளே கலந்திருக்கும்
இது நீங்கள் இல்லாத உலகம் என்று தோன்றவே இல்லை
எங்கும்... எதிலும்... தொடர்ந்து வரும் உங்கள் புன்னகை...
துவளுகின்ற நேரமெல்லாம் - கண்ணீர்
துடைத்து விடுகின்ற உங்கள் பார்வை...
முப்பத்திரண்டு வருடங்களின் பின்
எங்கள் அத்தனை பேரையும்
ஒன்றாய்ச் சேர்த்து அழகு பார்த்த
உங்கள் அன்பின் வலிமை...
நினைத்து நினைத்துப் பார்ப்பதற்கு
எங்கள் ஆயுள் முழுக்க
அன்பு நினைவுகளை அள்ளித் தந்தீர்கள் அம்மா.

எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்
அந்த நினைவுகளில் நீங்காத சுகம் இருக்கும்
பிரியாது நாம் வாழ வரம் ஒன்று தரவேண்டும் - அம்மா
கலங்காது நாம் வாழ ஒரு கவசமாய் நீங்கள்
வரவேண்டும்....

**உங்கள் அன்புச் செல்வங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Dearest Ammama/Appamma,

We are very sad that you are not with us anymore. Even though we can't hear your voice and see your smile again, we will always remember what a wonderful person you were. All our lives you showed us so much love and had so much pride in us. We will miss you so much and will never forget the love you gave us. You will be remembered in our hearts forever. We are certain that you have found true happiness in heaven with our Appappa.

**Your loving grandchildren**

### God's Garden

God looked around his garden
And He found an empty place.
And then He looked down upon the earth,
And saw your tired face.

He put His arms around you,
And lifted you to rest.
God's garden must be beautiful,
He always takes the best.

He knew that you were suffering,
He knew you were in pain,
He knew that you would never
Get well on earth again.

He saw the road was getting rough
And the hills were hard to climb,
So He closed your weary eyelids,
And whispered "Peace be thine".


It broke our hearts to lose you,
But you didn't go alone,
For part of us went with you,
The day God called you home.

-Source from Internet-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த



## சிவபுராணம்

தொல்லை யிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவாநெறி யளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் மென்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோந்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி! எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப்பிறப்பறுக்கும் மன்னனடிபோற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தைமகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயவுரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளக்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் இகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யாவிமலா விடைப்பாக வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமானே
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்றசோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராஅமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே! தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தங்கருத்தின்
நோக் கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி?

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள் மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த் தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் ~ மெள்ள
முகம் மேல் முகம் வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வாய்க்கு

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையிலே
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூழ்க மூழ்கவே

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுமே பாவியேன் ஐயகோ ~ மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின் பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ ~ சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்

வீற்றிருந்தாள் அன்னை வீதி தனில் இருந்தாள்!
நேற்றிருந்தாள் இன்று வெந்து நீறானாள் ~ பால் தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

ஆசிரியர் : ஔவையார்

## கடவுள் வாழ்த்து

கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டை தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
ஐயம் புகினும் செய்வன செய்
ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழகு
அஃகமும் காசும் சிக்கெனத் தேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் நூல்

# ஆத்திசூடி

## கடவுள் வாழ்த்து


ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

1. அறம் செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகம் சுருக்கேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டுச்
சென்ற எம் தாயின் மரணத்தின் போது ஓடி
வந்து ஆறுதல் கூறியவர்கள் தொலை
தூரங்களிலிருந்தும் அனுதாபம் தெரிவித்தோர்,
இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள்
அந்தியேட்டி ஆத்ம சாந்தி பிரார்த்தனையில்
பங்கு கொண்டவர்கள், இம்மலரின் அட்டைக்காக
குமரபுரம் முருகன் ஆலயத்தை ஒளிப்படம்
எடுத்து தந்துதவிய பரந்தன் முல்லை வீதி
ரூபன் போட்டோஸுக்கும் அட்டைப் படத்தை
அழகாய் வடிவமைத்து தந்த லவனுக்கும்
இம்மலரை அச்சிட்டு தந்த
JDK பிரிண்டர்ஸுக்கும்
மற்றும் பலவழிகளிலும் எமக்கு உதவி புரிந்த
அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை
தெரிவித்துக் கொள்கிறோம்.




குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org